தமிழ் நாடு அரசு

பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்திருத்த (ஏ) துறை
தலைமைச் செயலகம், சென்னை-9
கடித எண். 61146/ஏ/96-1
நாள். 18.9.96.

அனுப்புநர்:

திரு பி.எஸ். பாண்டியன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்:

அனைத்து அரசுத் துறை செயலாளர்கள்,
சென்னை-600 009.

ஐயா,

பொருள்: அலுவலக நடைமுறை - அரசாணைகள் ஆங்கிலம் மற்றும் தமிழில் வெளியிட அறிவுரைகள் - வலியுறுத்தப்படுகிறது.

பார்வை: 1) அரசாணை (நிலை) எண். 371, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறை நாள். 31.10.86.

2) அரசாணை (நிலை) எண். 182, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத்துறை நாள். 27.6.89.

--------

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் அரசின் ஆணைகள் மற்றும் கடிதப் போக்குவரத்து ஆகியவை அரசாணை (நிலை) எண். 2070, கல்வித்துறை, நாள். 2.12.71-ல் அறிவிக்கப்பட்டவாறு/ விலக்களிக்கப்பட்ட இனங்களைத் தவிர பிற அனைத்து இனங்களிலும் தமிழில்தான் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலும், கடிதப் போக்குவரத்தைப் பொறுத்தமட்டில் ஆங்கிலத்தில் ஒரு கடித வரைவினை எழுத வேண்டுவது இன்றியமையாததென்று கருதப்பட்டால் பொறுப்புள்ள ஒரு அலுவலரின் அனுமதியின்றி அதனை ஆங்கிலத்தில் எழுதக் கூடாது எனவும், அவ்வரைவு விதி விலக்குப் பெற்ற இனத்தைச் சேர்ந்ததா என்பதை ஆராய்ந்து அந்த அலுவலர் அனுமதித்தப் பின்னரே ஆங்கில வரைவுகள் எழுதப்படலாம். இதைத் தவிர சுற்றாணைக் குறிப்புகள், குறிப்புக் கோப்பின் குறிப்புகள், நினைவூட்டுகள், ஒப்பளிப்புக் கடிதங்கள், இடைக்கால மறுமொழிகள், அசல் திருப்புகை முடிவுகள், அலுவல் சார்பற்ற குறிப்பாணை ஆகிய வரைவுகளுக்கும் தமிழையே பயன்படுத்த வேண்டும். ஆங்கிலத்தை அறவே தவிர்த்திட வேண்டும்

...2

எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. பதிவேடுகள் பேணுவகைகளைப் பொறுத்தமட்டில் அவைகள் பொதுவாக அனைத்தும் தமிழிலேயே பேணப்படலாம். அவற்றிற்கு விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. சில பதிவேடுகளை மட்டும் ஆங்கிலம் பயன்படுத்தலாம். இதைத் தவிர இதுவரையில் ஆங்கிலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த பதிவேடுகளை உடனடியாக தமிழுக்கு மாற்றலாம் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. பார்வை இரண்டில் கண்ட அரசாணையில் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படும் விதிகள், விதிமுறைகள், ஆணைகள் மற்றும் விதிவிலக்கினங்கள் தவிர ஏனைய ஆணைகள் தமிழிலேயே பிறப்பிக்கப்பட வேண்டும் எனவும், தலைமைச் செயலகத் துறைகள் ஆங்கிலத்தில் ஆணைகள் வெளியிடும் நேர்வுகளில் இனி தமிழிலும் ஆணைகள் வெளியிட வேண்டும் எனவும், இவ்வாறு வெளியிடப்படுவதைத் தொடர்புடைய அரசுத் துறைச் செயலாளர்கள் முழுமையாக கண்காணிக்க வேண்டும் என்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

4. ஆனால், பல துறைகள் இவ்வாணைகளை கடைபிடிக்காமல் ஆங்கிலத்தில் மட்டுமே ஆணைகள் வெளியிடுகின்றன. எனவே, அனைத்து அரசுத் துறை செயலர்களும் தங்கள் துறைகளில் வெளியிடப்படும் அனைத்து ஆணைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடுமாறு அறிவுறுத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள,

18/9/96

அரசு செயலாளருக்காக

நகல்:

தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.

துறைப் பிரிவுகள்,

ணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை,

சென்னை-9.

இணைப்புக் கோப்பு/ உதிரி நகல்கள்.